*Reprint from Kalaimagal.*



# கலைமகள்

*Reprint from "Kalaimagal"*

36

# சில இராமாயணச் சிற்பங்கள்

க. அ. நீலகண்ட சாஸ்திரி

இராவணன் குபேரனை ஜயித்து அவனுடைய புஷ்பகவிமானத்தை அபகரித்து மிக்க கர்வத்துடனே ஸ்கந்தவனத்தின் உள்ளே பிரவேசிக்கப் பார்த்தான். அப்போது அவனுடைய விமானம் உள்ளேசெல்லாமல் திடீரென்று நின்று விட்டது; அது சிவனது கட்டளை. இதை அறியாத இராவணன் பலவாறு யோசித்தான்; அப்போது நந்தி அவனருகிற்சென்று, "இது சிவனுடைய உத்யானம்; இம்மலையின்மீது சங்கரன் விளையாடிக்கொண்டிருக்கும்வேளை; யாராலும் இச்சமயம் உள்ளேபோகமுடியாதபடி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நீ பேசாமல் திரும்பிப் போகாவிட்டால் நாசமடைவாய்" என்று கூறினன். இராவணன் வெகுகோபத்துடனே விமானத்தினின்றும் இறங்கி, "இந்தச் சங்கரன் என்பவன் யார்? இவன் ஏன் இம்மலையில் இருக்கவேண்டும்? நீயார் ஒரு குரங்குமுகத்தான் என்னைத் தடுப்பதற்கு?" என்று பலவாறுகப் பேசினன். சங்கரனை அவமதித்த இராவணன் மீது நந்தி வெகுகோபங்கொண்டு, "என்னை நீ குரங்குமுகத்தான் என்று அவமதித்துப்பேசியதனுல் குரங்குகளே உற்பத்தியாகி உன் குடியை வேரோடு கெடுக்கும்" என்று சபித்து மறுபடியும், "நானே இதோ உன்னைக்கொல்லமுடியும்; ஆயினும் நான் அப்படிச்செய்யவேண்டியதில்லை; உன்செய்கைகளாலே நீ முன்னமே கொலையுண்டவன்" என்று கூறிவிடுத்தான். அப்போது தேவர்களது வாத்தியங்கள் முழங்கின; பூமழைபொழிந்தது.

ஆயினும் இராவணன் நந்தி சொன்ன வார்த்தைகளின் கருத்தை உணராமலே, "ஏ! விடையூர்தீ! உனக்காகவா என் விமானம் போக்கற்றுத் தடுமாறலாயிற்று? நான் இம்மலையை வேரறப்பிடுங்குகிறேன். என்ன தைரியங்கொண்டு சிவன் எப்போதும் ஒருபேரரசன் போல் உல்லாசமாகக் காலங்கழிக்க எண்ணுகிறுன்? தனக்கு வந்திருக்கும்

ஆபத்தை அறியவில்லைபோலும்'' என்று ஆரவாரித்துக்கொண்டு, தன்கைகளால் மலையைத்தூக்க ஆரம்பித்தான். மலையும் அசைந்தது; தேவகணங்கள் கூட அசைந்தார்கள்; பார்வதியும் அம்மலையின் அசைவைக்கண்டு பயந்து மஹேசுவரன் அருகணைந்தாள். அச்சமயம் சகலதேவர்களுக்கும் முதன்மையான தேவன் தன்கால் கட்டைவிரலினால் மலையை இலேசாக அழுத்த, மலையின் அடியில் அகப்பட்டு வருந்தின இராவணனுடைய கைகள். அவ்வரக்கனுடைய மந்திரிகள் வெகு ஆச்சரியமடைந்தார்கள். கோபத்தாலும் கைகளின் வலிதாங்காத்துயரத்தாலும் இராவணன் போட்ட கூப்பாடு மூவுலகங்களையும் நிரப்பியது. மலைகள் நடுங்கின; கடல்களில் அலையெழுந்தது; பூமிமுழுதும் நடுங்கிற்று. அப்போது இம்மாதிரி அலறிக்கொண்டிருக்கிற இராவணனிடம் அவன் மந்திரிகள், ''நீர் எவ்விதத்திலும் உமையொருபாகரை வணங்கி அவருடைய கருணைக்கு ஆளாக வேண்டியதைத் தவிர வேறுஒருபாயமுமில்லை, இந்த ஆபத்தினின்று வெளியேறுவதற்கு'' என்று சொன்னார்கள். இராவணனும் அதற்கிணங்கிப் பற்பல ஸாமகானங்களினால் மஹாதேவனை வணங்க ஆரம்பித்தான். ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. சிவனும் மனமுவந்து இராவணனை விடுவித்து, அவனுடைய கூச்சலானது மூவுலகையும் கலக்கியதனாலேயே அவனை இராவணன் (கூச்சல்போடுகிறவன், கூச்சல் போடும்படி செய்கிறவன் என்று இரண்டு பொருள்பெற்ற ஒரு பெயர்) என்றே யாரும் அழைப்பார்களென்று அனுக்கிரகம் பண்ணி, பின்னும் சில வரங்களையும் கொடுத்து, சந்திரஹாஸமென்னும் வாளையும் உதவினான். இராவணனும் சிவனைத் தலைகளால் வணங்கித் திரும்பத் தன்புஷ்பகத்திலேயே மீண்டான்.

இந்தச் சரித்திரம் வால்மீகி ராமாயணம் உத்தரகாண்டம் 16-ஆவது ஸர்க்கத்திலுள்ளது. இந்தக் கதையில் மிகவும் சாரமான பாகமாகிய இராவணன் கைலாசமலையைத்தூக்கினது, நம்நாட்டுச் சிற்பிகளால் வெகு ஊக்கத்துடன் கையாளப்பட்டுவந்த புராணக் கதைகளில் ஒன்று. இந்தக் கதையைக் காட்டுகின்ற மூன்று சிற்பங்களைச் சற்றுக் கவனித்துப்பார்ப்போம்.

இவைகளில் முதலாவது நிஜாம் ராஜ்யத்தின் வடமேற்குக்கோடியிலிருக்கும் எல்லோரா என்னும் ஏலாபுரத்திலுள்ள கைலாஸநாதர் கோயிலின் தென்பாரிசச்சுவரில் செதுக்கப்பெற்றிருக்கிறது. இக்கோயிலே ஒரு பெருவிசித்திரமான வேலை; அதற்குமேல் ஆச்சரியத்தை உண்டு பண்ணக்கூடியது இந்தச் சிற்பம்.

இந்தக்கோயில் ஒரு பெரியமலைச்சாரலில் ஒரேபாறையினின்றும் குடையப்பட்ட ஒரு பெருங்கோயில் (படம்-1). இதைக்

கட்டினவன் பழையமஹாராஷ்ட்ர அரசனான முதலாம் கிருஷ்ணன் என்பவன். இவன்காலம் கி. பி. எட்டாம்நூற்றாண்டின் பிற்பாதி. இவன் இக்கோயிலைக்கட்ட ஆரம்பித்தபோது, காஞ்சீபுரத்துக் கைலாஸநாதர்கோயிலை மாதிரியாக வைத்துக்கொண்டு தன்நாட்டிலும் அதேவிதமான ஒரு சிற்ப ரத்தினத்தை அமைக்கவேண்டுமென்றே ஆரம்பித்தான். இக்கோயிலின் அழகு பழையசாஸநங்களில் இரண்டு சுலோகங்களால் அடியிற்கண்டவாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதாவது: "ஆகாயத்தில் உலாவும் தேவர்கள் அதைப்பார்த்து இது ஓர் இயற்கையமைப்பாகவே இருக்கவேண்டும்; செயற்கையமைப்பில் இவ்வளவு அழகை நாம் எங்கும் கண்டதில்லை என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறார்கள். இக்கோயிலைக்கட்டி முடித்த (அல்லது குடைந்து முடித்த) சிற்பியும், இதேமாதிரி வேறொரு கோயிலைச்செய்ய ஆரம்பித்தபோது அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை; அப்போது அவன் இக்கோயிலை மறுமுறைபார்த்து, 'நானா இதை அமைத்தவன்!' என்று திகைத்தான்."

இரண்டாவது படம் இராவணனுடைய முரட்டுப்பிரயத்தனத்தைக்காட்டும் சிற்பத்தை விளக்குகிறது. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சங்கள் இராவணன் தன் பலம்முழுதையும் உபயோகித்து மலையைப் பிடுங்கித்தூக்குகிற கருத்து வெளிவரும்படி இராவணனுடைய அங்கங்களின் நிலையை வெகுநேர்த்தியாய்ச் சிற்பி அமைத்திருப்பதும், இவன் பரபரப்புக்கு நேர்விரோதமாக மேலே சிவன் சாந்தமூர்த்தியாக அமர்ந்திருப்பதும், பயந்து பார்வதி அருகணுகியிருப்பதும், அவள் அம்மாதிரி பயந்து வந்தவுடனே சிவன் வெகு இலேசாகத் தனது இடதுகாலைக் கீழே ஊன்றி மலையை அசையாமல் நிறுத்தி விடுகிறதுமே. இன்னும் உற்றுப்பார்த்தால் மற்ற விசேஷங்களும் புலப்படும்; மேலே இராமாயணத்திலிருந்து எடுத்து எழுதப்பட்ட கதையின் ஸாரத்தை நன்கு உணர்ந்தவன் சிற்பி என்பது தெளிவாகும். எல்லோராவிலேயே வேறு குகைக் கோயில்களில் இரண்டு சிற்பங்கள் இதேகதையைச் சார்ந்தன உண்டு; ஆனால் அவை அவ்வளவு நேர்த்தியாக இல்லை.

இராமாயணக்கதைகள் இந்தியாவில் எல்லா இடங்களிலும் எல்லோராலும் கொண்டாடப்படுவதும் எல்லாப் பாஷைகளிலும் முதன்மைபெற்ற கவிகளால் பாடப்பட்டிருப்பதும் யாவரும் அறிவார்கள். ஆனால் அவைகள் கப்பலேறிச்சென்றும் மலைகளைக் கடந்தும் பிற தீவுகளிலும் நாடுகளிலும் சஞ்சாரம்செய்ததைப் பலர் அறியமாட்டார்கள். இருந்தும் நம் நாட்டில் இராமாயணமும் பாரதமும் எவ்வளவு மேன்மைபெற்றிருக்கின்றனவோ அதைக்காட்டிலும்

கொஞ்சம் அதிகமென்றே கூறலாம் அவைகளுக்கு ஒரு காலத்தில் ஸுமாத்ரா ஜாவா முதலிய தீவுகளிலும் மலேயா சியாம் இண்டோசைனு முதலிய நாடுகளிலும் இருந்த பிரசாரம். இப்போது கூட அநேகவிதமான கூத்துக்களும் ஆட்டங்களும் அந்நாடுகளில் இராம நாடகங்களாகவும் பாரதக்கதைகளைச் சார்ந்தனவாகவும் இருப்பதைப் பல அறிஞர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். நமது ஆலயங்களைப் போலவே அங்கேயும் முற்காலத்தில் கோயில்கள் இருந்தன; நம் கோயில்களில் புராணம் வாசிப்பதுபோலவே அங்கேயும் புராணங்கள் வாசிக்கப்பெற்றன என்று சாஸநங்கள் கூறும். இவ்விஷயங்களையெல்லாம் இங்கு விரித்துரைக்கமுடியாது. ஆயினும் நமது கோயில்களிற்போலவே அவ்வூர்க் கோயில்களிலும் சிற்பங்கள் இருந்தன என்பதைக்குறிக்க, இராவணன் கைலாஸத்தைத்தூக்கின கதையையே காட்டுகிற இரண்டு சிற்பங்களைமட்டும் குறிப்பிடலாம்.

இவைகளில் முதலாவது (படம், 3) இப்போது கம்போடியா என்னப்படும் தேசத்திலுள்ள அங்கோர்வாட் என்னும் பழைய ராஜதானியிலுள்ள கோயிலில் உள்ளது. அங்கோர்வாட் என்னும் பெயர் 'நகரவாடம்' என்னும் வடமொழிச்சொல்லின்சிதைவு; ராஜதானிப்பட்டணம் என்பது அதன்பொருள். இந்தச் சிற்பத்தின் காலம் சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டுக்கும் 12-ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாயிருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. இந்தச் சிற்பத்திலுள்ள முகங்களைக் கவனித்தால் அந்த ஊர்ஜனங்களின் முகச்சாயையும் அவர்கள்நோக்கப்படியுள்ள அழகின் அமைப்பும் இன்னவென்பதை அறியலாம். சிற்பம் கொஞ்சம் அழிந்துவிட்டதால் சிவனுக்கு வலதுபுறம் உட்கார்ந்திருக்கும் பார்வதியின் முகம் நன்றாகப் புலப்படவில்லை. பார்வதியிருக்கும் இடத்தையும் நோக்கிச் சிவன் உட்கார்ந்திருக்கிற மாதிரியையும் பார்த்தால், அதாவது சிவன் ஒரு காலைத்தொங்கவிட்டு மலையை அமுக்காததைப் பார்த்தால், இராவணனுடையமுயற்சி ஆரம்பதசையிலே இருப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது. அல்லது மலையைச் சிவன் அமுக்கிநிறுத்திவிட்ட பிறகு எல்லோரும் பயம்தெளிந்து இராவணன்மட்டும் அலறிக்கொண்டிருக்கும் அவஸரமென்றும் கருதலாம். இராவணனுடைய தலைகள் ஒரு கோபுரம் போல் அடுக்கப்பட்டிருப்பதும் அவன் கைகளின் வரிசைகள் காட்டப்பட்டிருக்கும் மாதிரியும் கவனிக்கத்தக்க விஷயங்கள்.

அடுத்தசிற்பம் (படம் 4) அதே நாட்டில் அங்கோர்வாட் என்னுமிடத்திற்கு சமீபத்திலேயே இருக்கும் ஈச்வரபுரக் கோயிலிலுள்ளது. இது வெகுநேர்த்தியான வேலையென்பது யாவரும் இதைப் பார்த்த மாத்திரத்திலேயே எளிதில் அறிந்துகொள்ளலாம்.

## :: அறிவைப் பெருக்கும் அரிய நூல்கள் ::

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஆரியமத உபாக்கியானம், 1-ம் பாகம், 21-ம் பதிப்பு | ... 0 | 10 |
| ஆரியமத உபாக்கியானம், 2-ம் பாகம் (15-ம் பதிப்பு) | ... 0 | 8 |
| பஞ்சரத்தினம், (5-ஸ்திரீ ரத்தினங்கள்) (9-ம் பதிப்பு) | ... 0 | 12 |
| மரகதவல்லி, ஓர் உயர்தரமான நாவல் (6-ம் பதிப்பு) | ... 0 | 12 |
| இராமாயண ஸாரம், அழகிய படங்களுடன் | ... 1 | 0 |
| ஸ்ரீமத் பாரத ஸாரம், பாரத கதை பூராவும் படங்களுடன் | ... 1 | 2 |
| ஸ்ரீமத் பாகவத ஸாரம், 12 ஸ்கந்தங்களின் சுருக்கம் | ... 1 | 0 |
| இயற்கை அற்புதங்கள் - ஓர் அருமையான நூல் | ... 0 | 10 |
| ஐரோப்பிய மஹா யுத்தம் (58 ஆப்டோன் படங்களுடன்) | ... 1 | 4 |
| வியாஸ விதானம், (மொழிபெயர்ப்பு விளக்கமும்) | ... 0 | 12 |
| பீஷ்மர் சரித்திரம் அணா 6 ... குஹன் சரித்திரம் | ... 0 | 4 |
| பரதன் (நாடகம்) அணா 12 ... திருமயிலைச் சிறப்பு | ... 0 | 2 |
| பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம் | ... 2 | 4 |
| மநுநீதிச் சோழன் அணா 8 ... தேடாத செல்வம் | ... 0 | 3 |
| குண்டலகேசி அணா 6 ... முரளீதரன் | ... 0 | 10 |
| கமலாகாந்தன் அணா 2 ... நீலி வசீகரம் | ... 0 | 10 |
| ராஜம் ஐயர் சரித்திரம் அணா 8 : தசகுமார சரித்திரம் | ... 0 | 6 |
| ஸ்ரீ கிருஷ்ணவதார சரித்திரம் (படங்களுடன்) | ... 0 | 8 |
| மங்கையர்க்கரசியார் அல்லது பாண்டிமாதேவியார் | ... 0 | 6 |
| பத்மினி - ஒரு தீர ரமணியின் சரிதை | ... 0 | 3 |
| பாதாளவாசி - (ஒரு கோடீசுவரனின் துன்பங்கள்) | ... 0 | 6 |
| மூர்த்தி நாயனார் சரித்திரம் | ... 0 | 3 |
| திருப்புகழ் விருத்தி உரை 10 படங்களுடன் | ... 6 | 0 |
| ஷை பெதர் வெயிட் பதிப்பு | ... 8 | 0 |
| திராவிட வேதத் திரட்டு | ... 3 | 8 |
| திருப்புகழ் இரத்தினமாலை, படங்களுடன் | ... 0 | 3 |
| திருக்குறள் நீதிக் கதைகள்... 0 10 தேசிங்குராஜன் கதை | ... 0 | 10 |
| கன்றும் கனியுதவும் (பெதர் வெயிட் பதிப்பு) | ... 0 | 10 |
| முருகன் - ஓர் உழவன் - (ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி மொழிபெயர்த்தது) | ... 1 | 8 |
| மீராபாய் அல்லது பக்தியிற் சிறந்த பதிவிரதை | ... 0 | 12 |
| ஷண்முக விஜயம் (கந்தபுராணச் சுருக்கம்) 19-படங்களுடன் | . 0 | 12 |
| நால்வர் சரித்திரம்—கலிகோ பயிண்ட் | .. 0 | 12 |
| ருக்மிணி அல்லது பதிபக்தி ... 0 8 ராபின்ஸன் குரூஸோ | ... 0 | 8 |
| ஷண்முகசுந்தரம் (துப்பறியும் நாவல்-8-படங்களுடன்) | ... 2 | 0 |
| விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் அல்லது கற்பின் வெற்றி | . 1 | 0 |
| தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை | ... 1 | 0 |

மேற்கண்ட நூல்கள் கலைமகள் சந்தாதார்க்குக்
குறைந்த விலைக்குக் கிடைக்கும்

'கலைமகள்' வருஷசந்தா : உள்நாடு ரூ. 4.
வெளிநாடு ரூ. 6.

:: கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை ::